# புதிய மேய்ப்பர்களைப் பயிற்றுவிக்க வழிகாட்டுதல்கள்

பயிற்சி பெறுபவர்கள் ப-தீ பாடங்களை உபயோகிக்க ஆரம்பிக்க உதவுதல்

## இந்தப் பாடங்களை நான் எவ்வாறு பயன்படுத்துவது?



தயவுசெய்து பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு வழிகாட்டும்படி ஒருகணம் இப்போது ஜெபிக்கவும்

**1. உங்களை விட அனுபவம் வாய்ந்த ஒரு தலைவரின் அறிவுரை பெற அவரை அடிக்கடி சந்தியுங்கள்.**

- இயேசுவும் அப்போஸ்தலர்களும் செய்தது போலவே ஒரு வழிகாட்டி (mentor) புதிய தலைவர்களைப் பயிற்றுவிக்கிறார்; ஒரு வகுப்பறையில் அல்ல – வேலை செய்யும் போதும் பயணம் செய்யும்போதும்.
- மக்களோடு உறவாடும்போது உங்கள் வழிகாட்டி என்ன செய்கிறார் என்பதைக் கவனியுங்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை அவரும் கவனிக்கிறார்.
- அடுத்த சில வாரங்களுக்கு உரிய வேலைகளைத் திட்டமிட உங்கள் வழிகாட்டி உங்களுக்கு உதவட்டும். அதுமட்டும் அல்லாமல் விசுவாசிகளின் தேவைகளுக்கு ஏற்ற பாடங்களைத் தேர்வு செய்யவும் உதவுவாராக. இது கர்த்தருடைய பணியை புதிய பகுதிகளுக்கு விரிவாக்க உங்களுக்கு உதவியாய் இருக்கும்.
- நீங்களும் உங்கள் சபையாரும் என்ன செய்துகொண்டு இருக்கிறீர்கள் என்பதை அவருக்கு அறிவியுங்கள். உங்கள் தோல்விகளையும் பிரச்சினைகளையும் தயங்காமல் உண்மையாக அறிவியுங்கள். உங்கள் தோல்விகளைக் கூற வெட்கப்பட்டு, உண்மைகளை மறைத்தால் அவரால் உங்களுக்கு உதவ முடியாது.
- உங்கள் சபையில் இதுவரை இல்லாமல் இருக்கும் ஊழியங்களை விசுவாசிகள் பயிற்சி செய்ய ஆரம்பிக்க உதவும் பாடங்களை தேர்வு செய்யவும்.
- முதலில், வாரத்துக்கு ஒரு முறையோ அல்லது இரண்டு வாரத்துக்கு ஒரு முறையோ உங்கள் வழிகாட்டியை சந்திக்கலாம். பின்னர் மாதத்துக்கு ஒரு முறையோ இரு முறைகளோ சந்திப்பீர்கள். அதற்குப் பின்னால், தேவை இருப்பின், மூன்று மாதம் அல்லது நான்கு மாதத்துக்கு ஒரு முறை சந்திப்பீர்கள்.
- நாம் ஒருவரை ஒருவர் திருத்த வேண்டும் (கொலொ.3:16). ஒருவருக்கொருவர் தவறுகளை ஒத்துக்கொள்ள வேண்டும் (யாக்.5:16). இதற்கு அர்த்தம் என்னவென்றால், நாம் பிறதலைவர்களின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டும்; அவர்களது உண்மையான விமரிசனங்களை கேட்க வேண்டும். நாம் அனைவருக்குமே இந்த வகையான மேற்பார்வை அவசியம். இதில், தலைவர்கள், ஒவ்வொருவருடைய ஊழியமும் வேதபூர்வமானதுதானா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இந்த மேற்பார்வை நமது தலைமைப் பண்புகளை வளர்க்க உதவுகிறது. மேலும் மக்களின் மேல் சுயநலமானதும் அவர்களுக்கு வேதனை தருவதுமான கட்டுப்பாட்டை செலுத்தாதபடி நம்மைத் தடுக்கிறது.
- தான் செய்வதை சோதிக்கவும், தனக்கு ஆலோசனை கூறவும் யாரையும் அனுமதிக்காமல் ஒருவன் தேவனுடைய வேலைகளைச் செய்தால் அவன் ஒரு முட்டாள்தனமான தலைவனே. இது பல சபைகளில் ஆபத்தான கெடுதல்களை உருவாக்கி விடுகிறது.

**2. மற்ற தலைவர்களையும் அடிக்கடி சந்திக்கவும்**

- உங்கள் பகுதியில் உள்ள பிற தலைவர்களை சந்தியுங்கள். தங்கள் மக்கள் என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை எல்லா தலைவர்களும் அறிவிக்க வேண்டும். உங்கள் ஊழியத்தை அவர்கள் பரிசீலனை செய்யட்டும். அவர்கள் ஊழியத்தை நீங்கள் செய்யுங்கள்.
- தலைவர்கள் ஒருவருக்கொருவர், செய்யும் பணிகளையும் ஆவிக்குரிய வளர்ச்சியையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும. முன்னேற்றமடைவதற்காக ஒருவருக்கு ஒருவர் உதவ வேண்டும். புதிய ஏற்பாடு பின்வரும் வழிகளில் எல்லாம் ஒருவருக்கு ஒருவர் உதவ வேண்டும் என்று கட்டளை இடுகிறது . ஒருவரை ஒருவர் தவறுகளை அறிக்கை இட, ஒருவர் பாரத்தை ஒருவர் தாங்க – இது போன்ற பல்வேறு “ஒருவருக்கொருவர்” கட்டளைகள் உண்டு.

- ஒருவருக்கொருவர் நேர்மையுள்ளவர்களாய் இருங்கள். ஒருவரிடத்தில் தவறு காணப்பட்டால் அன்பு வழியில் திருத்துங்கள். மற்றவர்கள் உங்களை திருத்த அனுமதியுங்கள். இந்த வகையில் நாம் வளர பரிசுத்த ஆவியானவர் உதவுகிறார்.


## 3. பிற புதிய தலைவர்களுக்கு வழி காட்டுங்கள்

- எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் புதிய மேய்ப்பர்களுக்கு வழிகாட்ட நீங்கள் ஆரம்பிக்க வேண்டும். இந்த ஊழியங்களில் சிலர், உடன் மேய்ப்பாளர்களாகவும், துதி ஆராதனையை வழிநடத்துபர்களாகவும், மூப்பர்களாகவும் இருந்து, உங்கள் சபையை கண்காணிப்பதற்கு உதவுவார்கள். மற்றவர்கள் புதிய சபைகளை ஆரம்பிப்பதிலும் சேவை செய்வதிலும் ஈடுபடுவார்கள்.
- அவர்கள் செய்யும் வேலைகளையும், அவர்களுடைய திட்டங்களையும் குறித்து அவர்களோடு பேசுங்கள்.
- அவர்களுடைய சபை மக்களின் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ற பாடங்களைத் தேர்ந்தெடுக்க அவர்களுக்கு உதவுங்கள்.
- அவர்களுக்கு உதவி தேவைப்படும் வரையில் இதைச் செய்யுங்கள். 2 தீமோத்தேயு 2:2 ல் புதிய ஏற்பாடு நீங்கள் பிற மேய்ப்பர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று கூறுகிறது. பவுல் தீத்துவுக்கு அறிவுரை கூறியது போல புதிய மேய்ப்பர்களை நீங்கள் நியமிப்பதும் அவசியமாகலாம்.
- புதிய மேய்ப்பர்களின் குணநலன்கள் தீத்து 1:5-9 ல் விளக்கப்பட்டபடி இருக்க வேண்டும். முதலில் அவர்களுடைய தகுதி நிரூபிக்கப்பட வேண்டும். நிரூபிப்பதற்கு ஒரு வழி, அவர்கள் மற்றவர்களைக் கண்காணிக்க முடியும் என்று காட்டுவதே. முதலில் அவர்கள் தங்கள் குடும்பத்தை நல்ல முறையில் நடத்த வேண்டும். இவ்வாறு செய்யும் போது ஒரு சபைக்கும் அவர்களால் சிறந்த முறையில் சேவை செய்ய முடியும் என்று தெளிவாகிவிடும்.
- அவர்களால் இயலும் என்று கண்டறிந்த உடன் புதிய மேய்ப்பர்களாக அவர்களை நியமித்து வழிகாட்ட வேண்டும். சமீபத்தில் மாறியவர்களை கண்காணிகளாக நியமிக்கக் கூடாது என்று 1 தீமோத்தேயு 3:1-7 கூறுகிறது. பவுல் இதற்காக எவ்வளவு நாள் காத்திருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால் சில விசுவாசிகள் 3 வாரத்திலேயே அனுபவ முதிர்ச்சி அடைந்து விடுவர். சிலருக்கோ முப்பது வருஷமும் பிடிக்கலாம். கலாத்தியாவில் உள்ள சில புதிய சபைகளுக்கு சில வாரங்களிலேயே புதிய தலைவர்களை பவுல் நியமித்ததாகத் தெரிகிறது (அப். 14). அந்தியோகியா போன்ற வளர்ந்த சபைகளில் நாம் அதிக நாள் காத்திருக்க வேண்டும். 'அனுப்பப்பட்டவர்களாக' பவுலையும் பர்னபாவையும் கைகளை வைத்துப் பொறுப்பளிக்க அவர்கள் ஓராண்டு காலம் காத்து இருந்தனர்.
- பிற தலைவர்களுக்கு வழிகாட்ட "தலைவர்களைப் பயிற்றுவிப்பவர்களுக்கான வழிகாட்டுதல்களை" வாசிக்கவும்.

## 4. உங்கள் சபைமக்களின் தற்போதைய விருப்பத்திற்கும் தேவைக்கும் பொருத்தமான பாட தொகுதிகளையும் செயல்பாடுகளையும் தெரிந்து கொள்க.

பவுல் - தீமோத்தேயு பயன்படுத்துவோர் பட்டியலை உங்கள் பயிற்சியாளர் அல்லது ஒருங்கிணைப்பாளரிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். அல்லது www.paul-timothy.net லிருந்து டவண்லோடு செய்து கொள்ளவும் (click 'Download Menu'). உங்களுக்கு விருப்பமான படிவத்தை தேர்ந்து கொள்ளவும். மேலும் 'ஒரு பயன்படுத்துவோர் பட்டியலின் அச்சிடப்படக்கூடிய வடிவத்தையும;' தேர்ந்து கொள்ளவும் (மேலே உள்ள அறிவுரைகளை வாசிக்கவும்)

- உங்கள் சபை மக்களின் தற்போதைய தேவைக்கும் பிறருக்கு சேவை செய்வதற்கு ஏற்ற வாய்ப்புக்கும் பொருத்தமான பாடத்தை பயன்படுத்துவோர் பட்டியலில் இருந்து ஜெபத்தோடு தெரிந்து கொள்ளவும். சும்மா பட்டியலின் முதல் பாடத்தில் இருந்து ஆரம்பித்து முறைப்படி அப்படியே செல்ல வேண்டாம்.
- வாரத்துக்கு வாரம் மக்களுக்கு தேவையான பாடத்தைக் காட்டுமாறு கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளவும். புதிதாகப் பிறந்த குழந்தைகளைப் போலவே புதிய சபைகளுக்கும் அவசரமாக சந்திக்க வேண்டிய தேவைகள் இருக்கும். இரண்டு வெவ்வேறு சபைகள் வளர்ச்சி அடைய ஒரே வழியைப் பின்பற்றுவதில்லை.



**ì கேட்கும் காதுகளுடன்ì ஞானமுள்ள மேய்ப்பர்கள் தங்கள் மந்தையில் உள்ள ஆடுகளின் குரலை கவனமுடன் கேட்கிறார்கள்.**

- இந்தத் தேவைகளையும் வாய்ப்புகளையும் அறிய உங்கள் மக்கள் கூறுவதை கவனத்துடன் கேளுங்கள்.
- ஒவ்வொரு ஊழியப் பகுதிக்கும் பல பாடத் தொகுதிகள் உள்ளன. உதாரணமாக "ஆராதனை" என்ற ஊழியத்தில் அடங்கியுள்ள தொகுதிகள் ஆவன. ஐக்கிய விருந்து, இயேசுவின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடுதல், ஆராதனையின் பிற அம்சங்கள்.
- ஒவ்வொரு தொகுதியின் பாட பொருளுக்கும், மேய்ப்பர்களுக்கும், பிள்ளைகளுக்கும் என்று தனித்தனி பாடங்கள் உண்டு. பெரியவர்கள் படித்து வரும் பொருளோடு சம்பந்தப்பட்ட வேதக் கதையை பிள்ளைகள் முன்கூட்டியே கற்றறிவார்கள். ஆராதனையின் போது இந்தக் கதைகளை பிள்ளைகள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டலாம்.
- மேய்ப்பர்களுக்கான பாடத்தின் தலைப்பில் "மேய்ப்பர்கள்" என்ற வார்த்தை இருக்கும். இந்தப் பாட எண் 'a' என்ற எழுத்தோடு முடிவடையும்.
- பிள்ளைகளுக்கான பாடத்தின் தலைப்பில் 'பிள்ளைகள்' என்ற வார்த்தை இருக்கும். இந்தப் பாட எண் 'b' என்ற எழுத்தோடு முடிவடையும்.
- சில தொகுதிகளில் துணைப்பாடங்கள் உண்டு. இதில் அந்த பாடப்பொருள் பற்றிய கூடுதல் விவரங்கள் இருக்கும்.
- ஒவ்வொரு புதிய மேய்ப்பர்களின் பாடத்திலும் பல செயல்பாடுகள் இருக்கும். இவை எல்லாவற்றையும் நீங்கள் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை.

**5. உங்கள் மந்தைக்குப் போதிக்கும் முன்னரும், ஏதாவது ஒரு செயல்பாட்டில் வழிநடத்தும் முன்னரும் நன்றாக உங்களை ஆயத்தம் செய்து கொள்ளுங்கள்.**

- நீங்களும் உங்கள் மக்களும் முதலில் நன்றாக ஆயத்தம் செய்து உங்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். திட்டமிட்ட காலத்திற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாகவே ஆரம்பிக்க வேண்டும்.
- ஆராதனை சமயத்தில் பிள்ளைகள் செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்து பிள்ளைகளின் ஆசிரியர்களோடு ஆராதனை நடத்துபவர் கலந்தாலோசிக்க வேண்டும். அந்த வாரத்தின் பாட பொருளோடு ஒத்துப் போகும் பாடல்களையும் செயல்பாடுகளையும் தேர்ந்தெடுக்குமாறு ஆராதனையை வழிநடத்தும் தலைவரிடம் கேட்டுக் கொள்க.
- உங்கள் மந்தை சிறியதா? இந்தகைய சிறு சபைகளில், ஆராதனையை முன்கூட்டியே ஆயத்தப் படுத்துவதை அலட்சியம் செய்ய சாத்தான் மேய்ப்பர்களைத் தூண்டுவான். பெரிய சபையைப் போலவே, சிறிய சபைகளும் முன்கூட்டியே திட்டமிட்டு ஆயத்தப்படுவது எவ்வளவு முக்கியம் என்பதற்கு நான்கு காரணங்கள் உண்டு:

  1) சிறிய சபைகளில், புதிய ஏற்பாடு வலியுறுத்துவது போல, யாவரும் வெவ்வேறு வழிகளில் ஆராதனையில் பங்கேற்கின்றனர். இதுவே இதன் வலிமை. உலகெங்கிலும் பெரிய சபைகளை விட சிறிய சபைகளிலேயே அநேகர் கிறிஸ்துவுக்குள் வந்து அவருக்கு சேவை செய்கின்றனர். உதவியாளர்களை முன் கூட்டியே நாம் ஆயத்தப் படுத்தாவிட்டால் நாம் இத்தகைய பங்கேற்பை இழந்து போவோம். தலைவரே எல்லா முக்கியமான விஷயங்களையும் செய்வார். இது பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தும் பாவமாகும். நாம் கண்காணிக்க தேவன் நமக்கு கொடுத்த மந்தையை இது முடமாக்கிப் போடும்.

  2) பெரிய சபைகளைப் போலவே சிறிய சபை மக்களுக்கும் அதே தேவைகளே உண்டு. இதற்கு ஜெபத்துடன் கூடிய ஆயத்தம் தேவை.

  3) பெரிய சபைகளுக்குப் பெரும்பாலும் நன்றாகப் படித்த முழு நேர போதகர்கள் உண்டு. ஆராதனைக்கு ஒரு நாள் முன்னரே பல ஆயத்தங்களை செய்ய நேரமும் திறமையும் அவர்களுக்கு உண்டு. இருந்தாலும் சிறு சபைகள் வேகமாகப் பெருகும். எனவே விரும்பித் தொண்டாற்றுவோரே (Volunteers) பெரும்பாலும் இருப்பார்கள். இவர்களுக்கு அனுபவமும் கல்வியும் குறைவாகவே இருக்கும். ஆராதனை வேளை வரை ஆயத்தப்படாமல் இவர்கள் இருந்தால் ஆராதனை சரிவர நடைபெறாமல் தேவ மந்தை தேவ ஆசீர்வாதத்தை இழந்துவிடும்.

  4) உதவியாளர்களோடு ஜெபத்தோடு திட்டமிட்டு ஆயத்தப்படும் வேளைகளில் பரிரசுத்த ஆவியானவர் வல்லமையாக செயல்படுவார். ஆராதனை வேளையில் மட்டுமல்ல. இயேசுவும் பவுலும் செய்தது போல உதவியாளர்கள் செய்யும் இந்த ஆயத்தங்களை உபயோகித்து தேவன் புதிய தலைவர்களை உருவாக்குகிறார்.

6. **மந்தையை வழிநடத்த மற்றவர்களோடு இணைந்து பணியாற்றவும்**

- ஞானமுள்ள தலைவர்கள் தனியே செயல்பட மாட்டார்கள். ஆராதனையை இயேசுவும் அப்போஸ்தலர்களும் தனியாக பணியாற்றவில்லை. ஆராதனையை வழி நடத்தவும், மந்தையை மேய்க்கவும் உங்களுக்கு உதவி செய்ய பிற பணியாளர்களை ஆயத்தப்படுத்துங்கள். இதில் சிலர் மக்களின் சிறப்பான தேவைகளுக்காக வாரந்தோறும் சேவை செய்யும் மூப்பர்களாக இருப்பார்கள்.
- ஆராதனையை வழிநடத்த யாரையாவது நீங்கள் ஆயத்தப் படுத்த விரும்பினால் அவர்கள் ப-தீ பாடமான "ஆராதனையை வழிநடத்தும் தலைவர்களுக்கும் அவர்களது உதவியாளர்-களுக்குமுரிய வழிகாட்டுதல்கள்" என்பதை படிக்கவும். AOe
- பிள்ளைகளுடைய ஆசிரியர்களுக்கு குழந்தைகளுக்கான பாடத்தின் நகலை ஒவ்வொரு வாரமும் கொடுக்கவும்.

7. **ஒவ்வொரு புதிய மேய்ப்பரின் பாடத்திலுமுள்ள மூன்று பகுதிகளையும் செய்யவும்.**

- மூன்று பகுதிகளாவன:
  1. நமது இருதயத்தையும் மனதையும் தேவ வார்த்தையால் ஆயத்தப் படுத்துதல்
  2. வரும் வாரம் உங்கள் மக்கள் செய்ய வேண்டியதை உங்கள் உதவியாளர்களோடு திட்டமிடவும்.
  3. வரும் ஆராதனை நேரத்துக்கு உதவியாளர்களோடு திட்டமிடவும்
- பகுதி I - உங்கள் இருதயத்தையும் மனதையும் தேவ வார்த்தைகளால் ஆயத்தப்படுத்தவும் ஒரு ஆராதனையில் ஒரு பாடத்தில் உள்ள செய்தியை பரிமாறுமுன் ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு முன்னரே ஒவ்வொரு ப-தீ பாடத்தையும் கற்க ஆரம்பித்து விடவும். ஏனெனில் பாடத்தில் உள்ள விஷயங்களை புரிந்து அதன் அர்த்தத்தை அறிந்து கொள்ள நாள் பிடிக்கும். பாடத்தில் உள்ள விஷயங்களை உங்கள் மக்கள் தங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த உதவுவதற்கும் பாடதிட்டத்தில் உள்ள செயல்பாடுகளை வரும் வாரத்தில் நடைமுறைப் படுத்துவது எவ்வாறு என்றும் ஜெபத்தோடு சிந்தியுங்கள்.
- பகுதி - 2 - உங்கள் மக்கள் அடுத்த வாரம் செய்ய வேண்டியது என்ன என்பதை உங்கள் உதவியாளர்களோடு திட்டமிடுங்கள்.

  ஆராதனைக்குப் பின் வரும் வாரத்தில் உங்கள் சபை மக்கள் செய்ய வேண்டியதை திட்டமிட, ஆராதனைக்கு பல நாட்களுக்கு முன்னரே உங்கள் உதவியாளர்களை சந்தித்துப் பேசுங்கள். அவர்கள் செய்ய வேண்டியதைப் பற்றி ஒவ்வொரு பாடத்திலும் ஆலோசனைகள் உண்டு. தேவன், உங்கள் மக்கள் என்ன செய்ய வேண டும்என்று விரும்புகிறார் என்பதை நீங்கள் அறிந்திருந்தீர்களானால், அர்த்தமுள்ள ஆராதனையை ஆயத்தம் செய்வதும், போதிப்பதும் வெகு எளிதாய் இருக்கும்.
- பகுதி 3 - வரும் ஆராதனை வேளையை உதவியாளர்களோடு சேர்ந்து திட்டமிடுங்கள்.

  ஆராதனையை நடத்துவதற்கும் போதிப்பதற்கும் உங்கள் உதவியாளர்கள் உங்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஆராதனையை பல நாட்களுக்கு முன்னரேயே திட்டமிடுங்கள். பங்கேற்கும் ஒவ்வொருவரும் ஜெபித்து நன்கு ஆயத்தப்பட இது உதவி செய்யும். கவிதைகள் சொல்லுவோரும், நடித்துக் காட்டுவோரும் ஒத்திகை பார்க்க நேரம் தர வேண்டும். இது சாத்தியம் இல்லாத போது, ஆராதனையை வழிநடத்த உதவிசெய்பவர்கள், ஆராதனை தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பே சந்தித்து, ஜெபித்து, திட்டமிட வேண்டும். எல்லா விசுவாசிகளும் சுதந்திரமாக பங்கேற்க உதவுங்கள். இவ்வாறு செய்யும் போது கூட்டத்தில் ஒரு சிலர் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் நிலை ஏற்படாது.

8. **ஆராதனை நடவடிக்கைகளில் குழந்தைகளும் பங்கேற்கும்படி செய்யுங்கள்.**

- ஆராதனையில் குழந்தைகளைப் பங்கேற்கச் செய்ய, பிள்ளைகளின் ஆசிரியர்களோடு கலந்து பேசி ஏற்பாடு செய்யுங்கள். பிள்ளைகளுக்கு உரிய பாடங்கள், வேத கதைகள் நாடகமாக்குவதற்கும், ஆராதனை வேளையில் குழந்தைகள் செய்ய வேண்டியவை குறித்தும், ஆலோசனைகளைத் தருகிறது. கூடியமட்டும் குழந்தைகளும் பெரியோரும் இணைந்து செயல்பட வேண்டும்.
- அயலகத்தாரின் குழந்தைகளையும், இதுவரை விசுவாசிகள் ஆகாத அவர்களது பெற்றோர்களையும், அல்லது ஆராதனையில் கலந்து கொள்ளாதோரையும் சிறு நாடகங்களை அரங்கேற்ற உதவி செய்யுமாறு வேண்டுங்கள். முக்கிய பாத்திரங்களை அவர்களுக்குத் தரவேண்டாம். ஏனெனில் அவர்கள் வராமலும் இருக்கலாம். இவ்வாறு பங்கேற்பவர்கள் பெரும்பாலும் கிறிஸ்துவுக்குள் வருவதுண்டு.

9. **ஜெபிக்கவும், ஒருவருக்கொருவர் ஆலோசனை கூறவும், சிறு குழுக்களை அமையுங்கள்.**

- ஒருவர் கூறுவதை மற்றவர் நன்கு கவனித்துக் கேட்கும் சிறிய கூட்டங்கள் மூலமே, தேவன், நாம் கூட்டமாக கூடும்போது செய்ய வேண்டும் என்று விரும்பும் சில காரியங்களை செய்ய முடியும்.

- நாம் ஒருவருக்கொருவர் பல வழிகளில் சேவை செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்:
  ஒருவருக்கொருவர் அறிவுரை கூறுங்கள்: ரோமர் 5:14
  ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்துங்கள்: கொலோ. 3:16; எபி. 10:25.
  ஒருவருக்கொருவர் புத்திமதி கூறுங்கள்: எபி. 3:13
  ஒருவருக்கொருவர் அன்பு கூறவும், நற்காரியங்கள் செய்யவும் உற்சாகப்படுத்துங்கள்: எபி.10:24
  ஒருவருக்கொருவர் போதியுங்கள் (பலப்படுத்துங்கள், கட்டுங்கள்) 1 தெச. 4:18,5:1,11
  ஒருவருக்கொருவர் தவறுகளை அறிக்கை இடுங்கள்: யாக்.5:16
  ஒருவருக்காக ஒருவர் ஜெபியுங்கள் யாக்.5:16



**ஆராதனையின் போது, சிறுசிறு குழுவாக நாம் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும்போது தேவனின் பரிசுத்த ஆவியானவர் எவ்வளவு வல்லமையாகக் கிரியை செய்கிறார்**

**10. ஒரு சிறு குழுவுக்கு பொருந்தும் வண்ணமாக ஆராதித்து, தேவ வார்த்தையைப் போதியுங்கள்.**

- 1 கொரிந்தியர் 14:26 ல், எல்லோரும் ஏதாவது ஒரு வகையில் ஆராதனையில் பங்கு கொள்ள வேண்டும் என்று பவுல் அப்போஸ்தலர் கூறுகிறார். **ì நீங்கள் கூடி வந்திருக்கும் போது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந்நிய பாஷை பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான்.î**
- ஞானமுள்ள ஒரு மேய்ப்பன் சிறிய சபையில் மரபான மேடைப் பிரசங்கத்தை பயன்படுத்த மாட்டான். மாறாக, மக்கள் கேள்வி கேட்டு பதில் கூறவும், தாங்கள் கற்கும் தேவ வார்த்தையின் சத்தியத்தை எவ்வாறு நடைமுறையில் கைக்கொள்ளுவது என்பதை விவாதிக்கவும் அனுமதிக்கும் வகையிலேயே போதிப்பான்.
- ப-தீ பாடங்கள், விவாதக் கேள்விகளையும், கவிதைகளையும், கதைகளையும், நாடகங்களையும் தருகிறது. இதன் மூலம் போதனை வல்லமையுடையதாக இருக்கும். கதைகள் ஞாபகம் வைத்துக்கொள்ள எளிதானவைகள் ஆகும். இதன் மூலம் பிறகு கர்த்தருடைய வார்த்தையை உங்கள் மக்கள் கூறுவதற்கு உதவியாயிருக்கும்.
- ஆராதனையின் போது நாற்காலிகளை வட்டமாகப் போடுங்கள். இதனால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து பேசுவதற்கு வசதியாய் இருக்கும்.
- ப-தீ பாடத்திட்டத்தில் உள்ள எல்லாவற்றையும் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டாம். உங்கள் மக்களின் விருப்பத்திற்கும் கலாச்சாரத்திற்கும் ஏற்றவைகளையே தெரிந்து கொள்ளுங்கள்.

**11. கர்த்தரின் பந்தியை ஒழுங்காக ஆசாரியுங்கள்.**

- ஒவ்வொரு புதிய மேய்ப்பனின் பாடமும் கர்த்தரின் பந்தியை அறிமுகப்படுத்த வெவ்வேறு வேத பாடத்தை தருகிறது.
- சில சபைகள் 1 கொரிந்தியர் 11 ஐ மட்டுமே பயன்படுத்துகின்றன. ஐக்கிய விருந்துக்கான முக்கியமான வழிகாட்டுதலை கொண்டிருப்பதால் இதை அவ்வப்போது மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஆயினும், எப்போதும் இதையே பயன்படுத்துவதால், இயேசுவின் கிருபாதார பலியைக் குறித்து தேவ வார்த்தைகள் கூறும் மதிப்பற்றதும், உணர்ச்சி ஊட்டுவதுமான பல அறிவுரைகள் மக்களுக்கு கிடைக்காமல் போய்விடுகிறது.

**12. ஆராதனையின் போது தேவன் செய்து கொண்டு வருவதை உங்கள் மக்கள் அறிவிக்கட்டும்.**

- தேவன் யாரையாவது குணப்படுத்தினாரா? கெட்ட பழக்கங்களின் மேல் விவாசிகளுக்கு வெற்றி கிடைத்தனவா? மக்கள் கிறிஸ்துவினிடத்தில் வந்தார்களா? புதிய சபைகள் ஆரம்பிக்கப்பட்டனவா? புதிய ஊழியங்கள் தொடங்கப்பட்டுள்ளனவா? தேவன் செய்வதை மக்கள் அறிவித்து, அதற்காக அவரைத் துதிக்கட்டும்.
- மக்கள் செய்து கொண்டு வரும் காரியங்களை அங்கீகரிக்கும் போது அது அவர்கள் தொடர்ந்து சேவை செய்ய அவர்களை ஊக்குவிக்கும். அது மேலும் மற்றவர்களை ஜெபிக்கவும், அதிகமாக காரியமாற்றவும் ஊக்கப்படுத்தும்.

13. **அந்தந்த வாரத்திலும் ஆராதனையின் போதும் ஆற்ற வேண்டிய காரியங்களைக் குறித்துத் திட்டமிடுங்கள்.**

- மக்கள் ஆற்ற வேண்டிய காரியங்கள் குறித்து நீங்கள் உங்கள் உதவியாளர்களோடு திட்டமிட்டுள்ள-வற்றைப் பற்றி ஆராதனையின் போது அறிவியுங்கள்.
- அடுத்த வாரத்தில் கிறிஸ்துவுக்கு எவ்வாறு சேவை செய்வது என்பதைப் பற்றி உங்கள் மக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கட்டும்.
- சேவை செய்ய விரும்புவோருக்கு உதவுங்கள். தங்களுக்கு தேவன் தந்துள்ள ஆவிக்குரிய வரங்களை உபயோகித்து அவர்கள் செயலாற்றட்டும். அவைகளாவன - சுவிசேஷம் கூறும் வரம் - பிறருக்கு இயேசுவைப் பற்றிக் கூறுதல், லூக். 24:46-48.

  உதவி செய்ய வரம் - உதவி தேவைப்படுவோருக்கு சேவை செய்தல், கலா. 5:13

  போதிக்கும் வரம் - தேவ வார்த்தையைக் கைக்கொள்ள உங்கள் குடும்பத்துக்கு உதவுதல், எபே. 5:21-33;6:1-4.

  ஞான வரம் - தேவனுடைய தாக்குதலை சமுதாயத்திற்குள் கொண்டு வருதல், மத். 5:13-14.

  இரக்க வரம் - ஏழைகளுக்கு உதவுதல், மத்: 25:31-46.

  ஊக்கப்படுத்தும் வரம் - உறுதி கூறி பிறரைத் தேற்றுதல், 1 தெச. 5:11.

  குணமாக்கும் வரம் - நோயாளிகளுக்கும், அசுத்த ஆவி பிடித்தவர்களுக்கும் உதவுதல், யாக். 5:13-16

  தலைமைதாங்கும் வரம் - சகோதர சபைகளோடு ஒத்துழைத்தல், அப். 15:41.

  கொடுக்கும் வரம் - தேவையில் உள்ள திட்டங்களுக்கு நிதியாதாரம் அளித்தல், 1 கொரி. 8:1-4.

14. **சேவை செய்யும் வாய்ப்பைப் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் அளித்தல்.**

    தங்களுக்கு தேவன் கொடுத்துள்ள ஆவிக்குரிய வரத்தைப் பெண்கள் பயன்படுத்த வேண்டும். சில கலாச்சார மக்கள் சமுதாயத்தில் ஆண்கள் பெண்களை போதிக்கவும் தலைமை ஏற்று வழிகாட்டவும் அனுமதிப்பதில்லை. சில கலாச்சாரங்களில் தெய்வ பக்தி உள்ள பெண்கள் ஆண்களுக்கும் போதிக்க முடியும்: பிரிஸ்கில்லா அப்பொல்லோவுக்கு போதித்தது போல (அப். 18:26). எல்லா கலாச்சாரங்களிலும், பெண்கள் இளம் பெண்களுக்கு வழிகாட்ட வேண்டும் (தீத்து 2:3-5).

- பெரிய பிள்ளைகள் இளம் பிள்ளைகளுக்கு வழிகாட்ட ஊக்கம் அளிக்க வேண்டும். இது இவர்கள் இருவரும் வளர வழி வகுக்கும்.
- வாரம்தோறும் சேவை செய்ய கூடும் பெண்களும், பெண் மூப்பர்களும் மூப்பர்களுக்கும் சிறு குழு தலைவர்களுக்குமுரிய வழிகாட்டுதல்கள் 'Aod' என்ற பாடத்தைப் படிக்கவும்.

15. **புதிய மேய்ப்பனின் பாடத்தைப் படித்து முடித்த பிறகு, துணைப்பாடங்களைப் படிக்கவும்.**

- புதிய மேய்ப்பனின் பாடங்கள் குறுகியதும் எளிமையானதும் ஆகும். ஆனால் மேலும் உயர் பாடங்களுக்கான அடிப்படைகளை அமைக்கும். இவற்றைப் புறக்கணித்துச் சென்றால், பிற்காலத்தில் உங்கள் ஊழியத்தை பலவீனப்படுத்தும் குறைகள் ஏற்படும்.
- புதிய மேய்ப்பனின் பாடம் தரும் குறிப்புகளை விட ஒரு தலைப்பில் இன்னும் அதிகமான செய்திகளைக் கற்க விரும்பினால், அதே தலைப்பில் வரும் துணைப்பாடங்களை வாசிக்கவும்.

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net